Rotary

THE MAGIC OF ROTARY

# VAAGAI VAANI

# வாகை வாணி

Newsletter of District Governor Rtn. R. RAJA GOVINDASAMY, RID 3000, India

Issue No 1 Ruby

July 2024






## DISTRICT GOVERNOR INSTALLATION

# GOVERNOR'S MESSAGE



ராஜபார்வை, ஆளுநரின் அன்புச் செய்தி

வாகை வாணி வாசகர்களுக்கு வாழ்த்துகள். நமது 2024-'25 ஆம் ஆண்டு அணிக்கு 'வாகை' எனப் பெயரிட்டிருக்கிறோம். ஆனால், நமது ஆண்டிற்கான கருப்பொருள், "The Magic of Rotary" மட்டுந்தான். 'வாகை' is the team. The Magic of Rotary is the theme. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை 'The Miracle of Transformation' என்கிறார்கள். அதுபோல ரோட்டரி செயல்பாட்டின் பரிணாமத்தை 'The Magic of Rotary' என்கிறோம். உலகளாவிய மருத்துவ அமைப்புகளுடன் இணைந்தும், பன்னாட்டு அரசுகளின் ஒத்துழைப்புடனும் பெரும் நிதி திரட்டி, ரோட்டரி தொண்டர்களை ஈடுபடுத்தியும் போலியோ எனும் பெருந்தொற்றை கிட்டத்தட்ட ஒழித்தது ரோட்டரியின் அற்புதம், நவீன உலக அதிசயம், ரோட்டரியின் மந்திரம். ஆச்சர்யம் ஆனால் உண்மை.

Rotary is an ever ready battery. This Rotary battery synergizes our efforts for doing good in the world. That is the magic of Rotary. It transforms a member into a volunteer and a leader thereafter. Such a competent Rotarian works for the betterment of the community. A Miyawaki Forest, a Study Centre, a livelihood programme for needy women, a Water Body Rejuvenation, etc. are manifestations of the Magic of Rotary. Come, let us effect more magic in 2024-'25. Vibrant Rotary Club மூன்று செயல்முறைகளை உணர்த்துகிறது. Join People, Exchange Ideas, Take Action : JET. ஜெட் வேகத்தில் இயங்கும் போது உயரப் பறக்கிறோம். வெற்றி வாகை சூடுகிறோம். 2024-25 ஆம் ஆண்டில் நமது செயல்பாடுகளை ஈகை, வாகை, உவகை என மூன்று நிலைகளில் உணரலாம். பணம் கொடுப்பது மட்டுமல்ல ஈகை, உழைப்புந்தான். ஈகை என்றால் அளித்தல், அதுவும் மகிழ்ச்சியுடன் பங்களித்தல். நம் அனைவரின் பங்களிப்பில் வெற்றியும், மகிழ்ச்சியும் காண்போம்.

ஜூலை மாதம் முதல் நாள் 'மருத்துவர்கள் நாள்'. உங்களது சங்கத்திலுள்ள மருத்துவர்களையும், உங்களது ஊரில் உள்ள மற்ற மருத்துவர்களையும் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தமைக்கு நன்றி. ஜூலை மாதம் தாய் சேய் நலம் சார்ந்த சேவைத் திட்டங்களை நிறைவேற்றும் மாதம். ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் உலகத் தாய்ப்பால் விழிப்புணர்வு வாரம். எனவே நாம் தொடர்ந்து தாய் சேய் நலத்திட்டங்களை நிறைவேற்றுவோம்.

ஆகஸ்ட் மாதம் புதிய உறுப்பினர்களை ஒருங்கிணைத்தல், புதிய சங்கங்களைத் துவங்குதல் ஆகிய பணிகளில் முனைப்புடன் ஈடுபட வேண்டுமென முன் கூட்டியே தெரிவிக்கிறேன். பருவமழைக் காலம் தீவிரமடையுமுன் நீர்நிலைகளைத் தூர்வாரி நீர் வரத்து, போக்கு வழித் தடங்களைச் சரிசெய்து நீர்த்தேக்கத்திற்கும், நீர் வெளியேறி நிலம், விவசாயம் செழுமை பெறவும் தீவிரமாக உழைக்குமாறு வேண்டுகிறேன்.

செயல் புரிவோம், சேவை செய்வோம், வெற்றி பெறுவோம், வாகை சூடுவோம்.

**Rtn. R. RAJA GOVINDASAMY,**
District Governor

# YOU SHOULD KNOW PRINCIPLE

என்னுடைய நண்பர் வீட்டிற்கு பெண் பார்க்க வந்தார்கள். பெண் எடுக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. ஆனால் பெண்ணை ஏன் பிடிக்கவில்லை என்ற காரணத்தை யாரும் கேட்கவில்லை. நண்பரின் பெண் சில நாட்களுக்கு முன் இரு சக்கர வாகனத்தில் சென்ற பொழுது ஏற்பட்ட சிறு விபத்தில் முழங்கை அருகே ஏற்பட்ட சிராய்ப்பினால் தோலில் சிறு காயமும், பிறகு ஆறிப்போய் மேலே இன்னும் காயப்பட்ட இடத்தில் தோல் வளராத நிலையில் பெண் பார்க்க வந்தவர்கள் அந்தக் காயத்தை பிறரிடம் பெரிதாகச் சொல்ல அடுத்து வரும் வரன்கள் தட்டிப் போக காரணமாக ஆகிவிட்டது.

ஊர்ஜிதம் செய்யாமல் யூகத்தின் அடிப்படையில் யாரைப் பற்றியும் பிறரிடம் சொல்வதானால் நினைத்துக் கூட பார்க்க முடியாத விளைவுகள் ஏற்பட்டு விடும். எவரிடமும் ஒரு செய்தியைக் கூறும் பொழுது அவருக்கு அந்த விஷயம் தெரிந்தே ஆக வேண்டும் என்றால் மட்டுமே சொல்ல வேண்டும் என்ற கோட்பாட்டை பின்பற்ற வேண்டும்.

எனது இனிய நண்பர் ஒருவர் கடைப்பிடிக்கும் கோட்பாடு என்னவென்றால் எந்தச் செய்தி கூறும் பொழுதும் கேட்பவனுக்கு அந்தச் செய்தி தெரிந்தே ஆக வேண்டும் என்ற செய்திகளை மட்டும் பகிர்ந்து கொள்வார். பிறரை பற்றிய செய்தியோ வதந்தியோ உண்மை என்று ஊர்ஜிதம் ஆனாலும் யாரிடமும் சொல்லும் பொழுது, கேட்பவருக்குத் தெரிந்தே ஆக வேண்டும் என்றால் மட்டுமே அந்தச் செய்தியை பகிர்வது அவர் வழக்கம்

உனக்குத் தெரிந்தே ஆக வேண்டும் என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்து (YOU SHOULD KNOW PRINCIPLE) நடப்பதனால் நல்லிணக்கமும், நட்புறவும் மென்மேலும் வளர்வதற்கான வாய்ப்பு உண்டு

**ரோட்டரியின் நான்கு வழிச் சோதனையும் அதையே வலியுறுத்துகிறது.**

**Rtn. SL. SETUMADAVA**

# GML EDITOR'S MESSAGE



It is a privilege for me to outreach all clubs of our District, Core Team Members, Past District Governors, Assistant Governors, Regional Coordinators and District Officials.

I embark on my journey of service with this first issue of GML Ruby of July. I wish each issue shall have a few takeaways for readers of GML.

Main objects of GML of 2024-25 will be to disseminate District Events, events focussed on monthly themes, significant events of the clubs, news from Rotaract, news from Interact, future programmes, RI News, etc. Feedback from Rotarians and readers are welcome.

**Rtn. SL. SETUMADAVA**
gml.ridistrict3000@gmail.com

# YADHUMANAVAL

## 3000 Women Students Empowered in 3 days at RID 3000

### An Empowerment Programme for College/ University Women Students

YADHUMANAVAL (அனைத்தும் அவளே) - a CSR programme of Idhayam Oil Industry whose CEO, PDG AKS Rtn. V.R. Muthu launched it 3 years ago through his home District 3212 and home club Rotary Club of Virudhunagar to empower school/college/ University students in commitment and competence, was held for three days in succession as the grand inauguration of the Rotary year 2024-'25 for RID 3000.

In each of the three events held on 1st, 2nd and 3rd July, the Keynote speaker Dr. Jeyanthashri Balakrishnan, renowned youth empowerment facilitator, addressed and inspired the women students to excel in intelligence, empathy, collaboration, self -realization, humility, gratitude and above all a daring to be great. The one hour power talk was followed by a question-answer session in which students lined up in large number for further tips on learning, living, bonding, conflict management, career planning, etc.



The key note speaker held herself like a determined cricket player on the crease and played a great innings to the full delight of a 1000 member women audience each day.



Rotary Club of Madurai West hosted the first day event (01.07.'24) at Madura College, Madurai, Rotary Club of Kodaikanal hosted the second day event (02.07.'24) at Mother Theresa Women's University and Rotary Club of Dindigul Queencity hosted the third day event at M.V.M. Government Arts College for Women, Dindigul. Rtn. VijayakumariDharmar, the Project Coordinator, and Past Assistant Governor of RID 3212 guided the organizers in hosting the programme.

President, Secretary and members of Rotary Club of Virudhunagar graced the first day's event at Madura College. IPDG Rtn. AKS V. R. Muthu was the Guest of Honour at Madura College and offered felicitations.

The Management, the staff and the students of Madura College, MVM Govt. College of Arts for Women, and Mother Theresa Women's University are overjoyed by the conduct of this special programme in their premises. On its march towards a century, the Yadhumanaval Programme is a big hit everywhere. Thanks once again to the sponsors Idhayam.




**Rotary Club of Dindigul Queen City** hosted the Women Empowerment Programme **Yadhumanaval** at M.V.M. Government Arts College for Women, Dindigul, on July 3rd.

# INTERACTOR'S CORNER





அரசு உயர்நிலைப்பள்ளி ஊமச்சிகுளம் எட்டாம் வகுப்பு அ பிரிவில் படிக்கிறேன். 24.6.2024 அன்று மதுரை ரோட்டரி கிளப் ஆஃப் மிட் டவுன் சார்பாக விமானம் மூலம் சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையத்திற்கு காலை 6 மணிக்கு 10 மாணவ மாணவிகள் வந்து சேர்ந்தோம். விமான நிலையத்தில் காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

விமானம் காலை 8-30 மணிக்கு சென்னை நோக்கிப் பறந்தது. விமானத்தில் முதன்முதலாக பயணம் செய்ததில் மிகவும் மகிழ்ச்சியாகவும் பிரமிப்பாகவும் இருந்தது. 10.30 மணிக்கு விமானம் சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்தோம். சென்னை விமான நிலையத்திலிருந்து மெட்ரோ ரயில் மூலம் தமிழக அரசு சட்டசபைக்கு 12 மணிக்கு வந்து அடைந்தோம். சட்டமன்றத்தில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களையும், கல்வி அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களையும், விளையாட்டு அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் சந்தித்தோம். சட்டமன்ற நிகழ்வுகளையும் பார்த்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். மதிய உணவிற்குப் பிறகு 2 மணி அளவில் அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு பாண்டிய நாட்டு நாணயங்கள், பல நாட்டு தபால்தலைகள், பலவகையான சிற்பங்கள் காணும் வாய்ப்பு கிடைத்து, சிற்பக்கலை கண்டு மகிழ்ந்தோம்.

மாலை 5 மணிக்கு கடற்கரையில் அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சர்கள் பேரறிஞர் அண்ணா, திரு. மு.கருணாநிதி, ஜெ.ஜெயலலிதா ஆகியோர்களின் சமாதிகளை பார்த்தோம். இரவு உணவிற்குப் பிறகு சென்னை சுற்றுலா பயணத்தை முடித்துக்கொண்டு இரவு 9 மணிக்கு பேருந்து நிலையத்தில் இருந்து மதுரை செல்லும் சொகுசு பேருந்து மூலம் 25-6-2024 அன்று காலை 6 மணிக்கு மதுரை வந்து சேர்ந்தோம். எங்களது பயணம் மகிழ்ச்சியாகவும் புதிய அனுபவமாகவும் இருந்தது. இந்த சிறப்பு மிகுந்த வாய்ப்பை எனக்கு அளித்த எமது பள்ளி தலைமைஆசிரியர் அவர்களுக்கும் ரோட்டரி கிளப் ஆப் மதுரை மிட்டவுன் தலைவர் திரு. சிவசங்கரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**ப. திவ்யதர்ஷினி**
ஊமச்சிகுளம், மதுரை - 14.

# ROTARACTOR'S CORNER

TOURING ACTIVITY OF ROTARACTOR – ALL OVER INDIA AND NEPAL

Rotaractor G.G.Sivaprakash is from Rotaract Club of Madurai North. He is PGPM Student in IIM, Tiruchy. He is an Engineering graduate and he did his schooling in Kendriya Vidyalaya, Madurai. He is 26.

In 2022, he ventured alone a tour across India for more than 200 days covering 22 states and 5 union territories. He covered more than 30000 km. He used public transport system either by bus or train whichever was available.

He is an intrepid explorer and wanderluster. Intrepid explorer means fearless, bold brave and courageous explorer. Wanderluster means person who has strong desire to travel.

- He started his travel from Madurai and passed through Karnataka, Goa, Maharashtra, Gujarat, Rajasthan, Punjab, Delhi, Jammu & Kashmir, Nepal, Bihar, Uttarpradesh, West Bengal, Orisha, Telengana, Andhra Pradesh and returned to Tamilnadu.
- He being only son of his parents, Initially he had to face opposition from his parents when he revealed his proposal of tour programme.
- Rotaractors of various cities have come forward and treated him very well.
- He incurred expenditure of around Rs.400/- per day for food and Travel. He spent from his accumulated savings.
- He went to Ellora caves, near Aurangabad, Lonar lake where colour of water changes when weather condition changes, Sula wineyard in Nasik (production unit of wine), Kumbha waterfall in Maharashtra, Adani port in Gujarat where highest import and export take place, camping in the Desert in Rajasthan, Kumbhalgarh fort in Rajasthan also known as Great wall of India etc.
- He visited famous Temples also say, Kedarnath, Badrinath, Varanasi etc.
- He was able to meet, Politicians, Advocates, Businessmen, Diamond factory owners, jewel designer, singers, Auto Drivers, Cloth Dealers, Travel Guides, Exporters, Hostel property managers etc.
- He was able to overcome fear ; to trust strangers ; to manage his finance; to practise self decision making. He developed communication skill.
- He was an Introvert. After this tour he became an extrovert.

The world is not as bad as the news channel portrays. A lot of Rotractors helped him in various cities. Some one or other came forward in providing food and / or stay. Only in travel, he was able to discover his potential.

He suggested us : COMMIT WITH YOUR GOALS TO ACHIEVE YOUR DESIRE.




Rtr. G.G. Sivaprakash

## VERY YOUNG ROTARIAN



ரோட்டராக்ட் என்றாலே என் மனமும் உள்ளமும் துள்ளிக் குதித்தோடிடும். அந்த அளவிற்கு ரோட்டராக்ட் மீது தீரா காதல் கொண்டவள் நான். காரணம், நான் யார் என்பதை எனக்கு அடையாளம் காட்டியது ரோட்டராக்ட். நாட்டு நலப்பணி திட்ட மாணவியாக இருந்த நான் அக்டோபர் 30, 2022-இல் எம் கல்லூரியின் ரோட்டராக்ட் சங்கம் நடத்திய மண்டல மாநாட்டில் நிகழ்ச்சி தொகுப்பாளராக பேசிட ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அதுவரை ரோட்டராக்ட் பற்றி எதுவும் அறிந்திடாமல் இருந்தேன். இந்த ஒரு நிகழ்வு என் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அன்று எனக்கு தெரியவில்லை. இந்த முதல் நிகழ்விலே அங்கு நிகழ்ந்தவற்றினால் எனக்கு ரோட்டராக்டில் சேர வேண்டும் என்ற அவா தோன்றிவிட்டது. இந்த நிகழ்விற்கு பிறகு ரோட்டராக்ட் சங்கம் நிகழ்த்தும் நிகழ்வில் தொகுப்பாளராகவும், பங்களிப்பாளராகவும் கலந்துகொண்டு ரோட்டராக்ட் பற்றி தெரிந்துகொள்ள தொடங்கினேன்.

ஒவ்வொரு நிகழ்விலும் ரோட்டராக்டர்களின் தலைமைத்துவம், ஈடுபாடு, நட்பு, அவர்கள் பழகும் விதம் மற்றும் அவர்களின் சேவை ஒவ்வொன்றும் என்னை ஈர்க்கத் தொடங்கியது. கல்லூரியை முடித்த அடுத்த ஆண்டே புதிதாக தொடங்கிய கரூர் அறம் ரோட்டராக்ட் சங்கத்தில் இணைந்தேன். ஒரு ரோட்டராக்டராக மாறிய பின்பு நிகழ்ச்சி தொகுப்பாளராக, உள்ளடக்க எழுத்தாளராக, மேலும் பல நிலைகளில் நான் என்னை மேம்படுத்திக் கொள்ள ஒரு தலமாக இது அமைந்தது.

இது மட்டுமல்லாது நடக்க இருக்கும் ரோட்டராக்ட் நிகழ்விற்கு உள்ளடக்கங்களை (Content) எழுத தொடங்கி இன்று உள்ளடக்க எழுத்தாளராகவும் (Content Writer) செயலாற்றி கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு என்னுள் புதைந்து கிடந்த பல திறமைகளை வெளிக்கொண்டு வந்தது ரோட்டராக்ட் என்பதே உண்மை.

ரோட்டராக்டில் இணைந்த முதல் ஆண்டிலே கரூர் ஏஞ்சல்ஸ் ரோட்டரி சங்கத்திலும் இணைய வாய்ப்பு கிடைத்து. ரோட்டரியில் இணைந்த பிறகு ரோட்டரியின் செயல்பாடுகளைக் கண்டு நான் வியக்காத நாளே இல்லை.

“உன் நண்பன் யார் என்று சொல் உன்னைபற்றி சொல்கிறேன்” என்று சொல்வார்கள். அதற்கிணங்க சேவை என்னும் ஒத்த மனப்பான்மையுடைய நண்பர்கள், பல் துறை ஆளுமைகள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோரின் தொடர்புகள் கிடைத்துள்ளன. இங்கு நாம் செய்யும் செயல்களாலும் என்னுள் ஏற்பட்ட மாற்றங்களாலும் என் உற்றாரும் உறவினரும் என்னைக்கண்டு வியப்படைகிறார்கள். இத்தகு மாற்றங்கள் எல்லாம் ரோட்டரியும் ரோட்டராக்டும் செய்த மந்திரமே. என் தலைமை பண்பை மேலும் மேம்படுத்தி சமூகத்திற்கு என்னால் இயன்ற சேவைகளை செய்திட இந்த வாகை ஆண்டில் கரூர் அறம் ரோட்டராக்ட் சங்கத்தின் செயளாலராக பொறுப்பேற்றுள்ளேன்.

ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் என்னும் கூட்டு குடும்பத்தில் நானும் ஓர் உறுப்பினராக உள்ளேன் என்பதில் எந்நாளும் பெருமைக் கொள்கிறேன்.

**Rtn. Rtr. கிருபா K.**

## BUILT HOUSES GIVEN TO VISUALLY CHALLENGED PERSONS FAMILIES AT BRIGHT HOME SITE, SAKKIMANGALAM VILLAGE, MADURAI






Rotary Club of Madurai Star, RI District 3000 carried out in partnership with Rotary Club of Madras, RI District 3232 in constructing four houses for the purpose of handing over to visually challenged persons families on Wednesday, the 08th May 2024 evening at Sakkimangalam Village, Madurai District. 10 Kms away from Madurai City.

Rtn. R. Raja Govindasamy, District Governor Elect, RI District 3000, Rtn. PDG. J. Sridhar, RI District 3232, Mrs. Kamala Manimozhian, Past Chairman of Innerwheel District 321 and Rtn. S. Ravi, President, Rotary Club of Madras, RI District 3232 each opened a house and handed over the key of the house to the Beneficiary of each house.

Rtn. Dr. Anuradha Ganesan, Director of Community Service, Rotary Club of Madras, RI District 3232 was the primary contact person between Rotary Club of Madras, RI District 3232 and Rotary Club of Madurai Star, RI District 3000 to facilitate to execute the project.

The cost of Project of constructing these four houses is INR 22.50 Lakh.

Rotary Club of Madurai Star already built 45 houses and handed over to the beneficiaries already as detailed hereunder chronologically :-

- Vacant house sites were given by TN Government when Sri M K Stalin, incumbent CM of Tamil Nadu was Home Minister in 2006.
- Rtn. PDG. Damodharan, RI District 3000 inaugurated the first phase of eight houses in 2008.
- Shri. U. Sahayam - IAS, District Collector of Madurai inaugurated four houses in 2011.
- IPDG Rtn. V. R. Muthu, Managing Director, Idhayam Sesame Oil of RI District 3212 inaugurated eight houses in 2014.
- Former Finance Minister, Government of India, Shri. P. Chidambaram inaugurated 8 houses in 2016.
- Fifteen houses were inaugurated by Shri. V. Moorthy, Minister of Commercial Taxes, Tamil Nadu and District Collector of Madurai, Shri Aneesh Sekar – IAS in Oct 2021.
- Now four houses are inaugurated. With this four houses project of building low cost shelter to Visually Challenged Persons families by Rotary Club of Madurai Star gets completed.

# INSTALLATIONS IN JUNE



Rotary Club of Thirumangalam




Rotary Club of Dindigul Queen City



Rotary Club of Karambakudi



Rotary Club of Aranthai Friends



Rotary Club of Theni Star




Rotary Club of Pudukottai Central



Rotary Club of Madurai Star




Rotary Club of Tiruchirapalli Royal

# INSTALLATIONS IN JUNE




Rotary Club of Chinnamannur Green City




Rotary Club of Palani & Oddanchatram Elite



Rotary Club of Pudukottai Maharani



Rotary Club of Madurai Sangamam




Rotary Club of Madurai Meenakshi



Rotary Club of Tirunagar Madurai




Rotary Club of Andipatti




Rotary Club of Theni Sangamam

# RID 3000 DISTRICT MONTHLY PROGRAMMES -2024-2025

## Jubilant July Projects

Maternal Health and Child Care – Asai Magal whole month Programme - Nutrition Kit & Gifts to Expectant Mothers in baby shower function at Government Hospitals

July - 1– Doctors Day Celebration – Honouring Doctors - Club Level Programme-

July -1 -Yadumanaval -Women Empowerment Programme - RC of Madurai West

July 2 -Yadumanaval -Women Empowerment Programme - RC of Dindigul Queen City

July-3 -Yadumanaval -Women Empowerment Programme - RC of Kodaikanal

July 5- Rotary Bosch Skill Development - I PhaseInauguration

July 14 – District Leadership Seminar – Madurai

July 20, 21- RLI Programme, Madurai

## Awesome August Projects

Asai Magal Programme Continues World Breast Feeding Awareness Programme - 1.08.2024 - 7.08.2024

Entrepreneurship RYLA

One more Once more Membership Campaign - year long programme

August 11 - Membership Seminar, Perambalur

August 14 &15 - Double Seven (77) Celebration
(Celebrate 77 th Independence Day in a School by conducting any one competition for Children in advance and distribute prizes to winners and sweets to children on Independence Day. Provide any educational need to school if possible)need to school if possible)

## Sensational September Projects

Teacher Support – Honouring Best Teachers – Club Level

Training The Teachers– District Level

Celebrate Community Week with Lions, JCI, Round Table & Local Service Organizations - September 11 - 17, 2024

Rotary on Wheels - Districtwide Car Bike Rally for Water Bodies Rejuvenation & Environment Protection - September 19-22, 2024

September 17th to 19 th – Rotary Women's Meet, Kodaikanal

September 22 - Youth Service Seminar, Tiruchirapalli

September 27th-29th - District RYLA, Kodaikanal

Revenue District Wise New Membership Orientation Seminar : September & February
finalized as per local convenience by respective RCs & AGs)

## Outreach October Projects

October-1-District Wide Blood Donation Programme

October-4th - 6th - Interact RYLA, Mavavai

October - 13 - Public Image Seminar, Madurai

October - 15 - Global Hand Washing Day: Awareness on Hand Hygiene & Oral Hygiene at Schools

October - 15 - One Day RYLA " Salam Abdul Kalam" at Schools

October - 18th -20th Rotaract RYLA, Bengaluru

Rotary Bosch Skill Development
II Phase

# RID 3000 DISTRICT MONTHLY PROGRAMMES -2024-2025

### Noble November Projects

- 3.11.2024 -District Interact Conference in association with Rotary Kalai Mandram, Madurai & District Arts and Crafts Event by Rotary Kalai Mandram for interactors
- 10.11. 2024 – Foundation Seminar, Madurai
- One Day Club Level - Mind Your Business Programme
- Club Level Entrepreneurship Seminar for Aspirants

### Delightful December Projects

- Cervical Cancer Awareness & Vaccination
- Mental Health Promotion &Treatment
- Job Fair
- Project Positive Health
- Rotaract Youth Exchange from Jaipur, D 3056

### Joyful January Projects

- Rotary Bosch Skill Development III Phase Commencement
- Financial Literacy for All
- Vocational Excellence Awards Presentation
- January 14th – Pongal Day Celebration
- Welcoming Rotary Friendship Exchange Visitors from USA
- Rotaract Friendship Exchange to Jaipur, RID 3056
- Enabling the Otherwise Abled
- January 11-17, 2025 – Club Level Helmet Awareness for Road Safety

### Fabulous February Projects

- Positive Peace Programme Honouring Peace Champions at Club Level
- February 8th & 9th -Vaagai Paramount District Conference, Ida Scudder Auditorium, Madurai
- Good Will Mission to Bali, Indonesia
- February 22nd & 23rd – District Rotaract Conference
- February 23 - Rotary's 119th Birthday & World Understanding and Peace Day.
- February 28th - National Science Day Celebration – Science on Wheels

### Marvelous March Projects

- Women's Day Celebration - March 8
- Demonstration on Oral Hygiene and Hand Hygiene at Schools & Establishment of Washing Stations with water at Schools in need.
- World Rotaract Week
- District Arts and Crafts Competition by Rotary Kalaimandram - During Rotaract Week- March 16

### Awakening April Projects

- Rotary Friendship Exchange Visit to USA
- Rotary Business EXPO
- Rotary Bosch Skill Development IV Phase
- Farmer Support at Uzhavar Sandai
- Farm Management Seminar
- Domestic Waste Management Campaign
- Waste Management Measures: Encashing the Garbage

### Magnificent May Projects

- Vocational and Youth Service Team to Srilanka
- Mental Health Guidance to Higher Secondary Students
- Guidance & Counselling for further studies to school pass outs

### Jolly good June Project

- June -5 –World Environment Day – Public Place Cleaning Campaign

# DOCTOR'S DAY
# CELEBRATIONS BY ROTARY CLUB OF MADURAI Phoenix




Rotary Club of Madurai Star



Rotary Club of Madurai Phoenix

## ஆசை மகளே

மகப்பேறு எதிர் நோக்கி இருக்கும் மகளிருக்கு வளைகாப்பும், வாழ்த்தும், நலப்பெட்டகமும், ஊட்டச்சத்தும் அளித்து “ஆசை மகளே” திட்டத்தை நிறைவேற்றிய ரோட்டரி சங்கங்களுக்கு நன்றி. இந்தச் சேவைத் திட்டத்தை இதுவரை இன்னமும் செய்து முடிக்காத சங்கங்களை இம்மாதம் முழுக்க அவரவர்க்குப் பொருத்தமான நாளில் நிறைவேற்றுமாறு வேண்டுகிறோம்.

ஜூலை மாதம் தாய்மை நலம், குழந்தை நலம் குறித்த திட்டங்கள் நிறைவேற்றும் மாதம் என ரோட்டரி குறிப்பிட்டுள்ளது. மேலும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் உலக தாய்ப்பால் வாரம் என்று World Alliance for Breastfeeding Action (WABA) அமைப்பு கொண்டாடச் சொல்லி வருகிறது. WHO மற்றும் UNICEF நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறது WABA.

தாய்க்கும், சேய்க்கும் பரஸ்பர மனநலம், உடல்நலம் தரும் தாய்ப்பால் எனும் அருமருந்து குழந்தைகளுக்குத் தவறாது கிடைக்க வேண்டும் என வலியுறுத்தும் வகையில் ரோட்டரி சங்கங்கள் மருத்துவர்கள், செவிலியர்கள் மூலம் மகளிரிடம் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்துமாறு வேண்டுகிறோம்.

அதாவது குழந்தை நலம் குறித்த சிறப்பு மருத்துவ ஆலோசனை முகாம் / கூட்டம் நடத்தி தாய்ப்பால் முக்கியத்துவத்தையும், குழந்தை நலம் காக்கும் கடமையையும் உணர்த்த வேண்டுகிறோம். ஜூலை மாதம், ஆகஸ்ட் மாதம் முழுக்க நடத்துமாறு வேண்டுகிறோம்.

தாய் சேய் நலத் தொண்டு தொடர்வோம்
மகளிர் சக்தி மேம்பாட்டுத் திட்டம்



Rotary Club of Madurai Sangamam



Rotary Club of Madurai Phoenix

**Rtn. இராஜி தனசேகரன்**
இணைச் செயலாளர்

**Rtn. ஸ்நேகா**
இணைச் செயலாளர்
மகளிர் சக்தி மேம்பாட்டுத்துறை

**Rtn. அல்லிராணி பாலாஜி**
மாவட்டச் செயலாளர்

**ஒருங்கிணைப்பாளர்கள்**

**Rtn. கயல்விழி V.** **Rtn. யாஸ்மின் S.** **Rtn. நான்ஸி R.**

**Maternal Health & Child Care Programme**

**Chairman**
**Rtn. K. செந்தில்குமார்**

**Co-Chairman**
**Rtn. Dr. P. ராம்குமார்**

# தாய் சேய் நலம்

சர்வதேச ரோட்டரியின் தலையாய சேவை, தாய்சேய் நலம் ஆகும். இந்த சேவையின் குறிக்கோள்கள் தாயின் நலத்தினை காத்தல். மகப்பேறு பாதுகாத்தல், ஆரோக்கியமான குழந்தை பேணுதல் ஆகும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மகப்பேறு என்பது திட்டமிடாத நிகழ்வாக விளங்கியது. ஆனால் அரசின் திட்டங்கள் மற்றும் ரோட்டரி இயக்கத்தின் சேவைத்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தாய்சேய் நலம் தற்பொழுது பாதுகாப்பாக இருப்பினும் மகப்பேறு மற்றும் பிரசவ நேரங்களில் தாய்க்கும் சேய்க்கும் அதாவது பெரிய உயிர் மற்றும் சிறிய உயிர் ஆகிய உயிர்காத்தல் சேவைகள் எந்தவிதமான பக்கவிளைவுகள் இன்றி சுகப்பிரசவமாக நிகழ்வதற்கான அத்துணை வசதிகள் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் இதர சகல வசதிகள் தயார் நிலையில் எப்போதும் எல்லோருக்கும் இருத்தல் வேண்டும் என்பதே ரோட்டரியின் நோக்கமாகும்.

கர்ப்பம் மற்றும் பிரசவங்களின் வெற்றி பல்வகையான காரண காரியங்களைக் கொண்டு அமைகிறது. முதலாவதாக தாயின் உடல் ஆரோக்கியம், இரண்டாவதாக கருத்தருத்தலின் போது தாயின் வயது, மூன்றாவதாக கர்ப்பகாலத்தில் பூரணமான மருத்துவ கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை வசதிகள் ஆகும்.

நமது இந்தியத் திருநாடு மிகவும் அகண்ட பாரதமாகும். அதிலும் எழுபது விழுக்காடு மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். அனைத்து மக்களுக்கும் அனைத்து வசதிகளும் உரிய இடத்தில், உரிய நேரத்தில் அமைய வேண்டும் என்பதே அரசு மற்றும் ரோட்டரியின் எண்ணமாகும். ஆக தாய்சேய் நலம் காத்தல் மற்றும் ஆரோக்கியமான மகப்பேறு ஆகிய நிகழ்வுகள் சுகமாகவும், சுமூகமாகவும் ஏற்படுவதற்கான பரிசோதனைகள் அதாவது இரத்தப் பரிசோதனை, ஸ்கேன் வசதிகள் பொருளாதார பாகுபாடின்றி அனைவருக்கும் கிடைத்தல் அவசியம்.



இதற்கான சமூக விழிப்புணர்வு மற்றும் குடும்பம் மற்றும் சமூகத்தின் ஈடுபாடு, கருத்தரித்தல் கர்ப்பகாலம் மற்றுமின்றி குழந்தை வளர்த்தல், குழந்தைகளின் கல்வி, குழந்தையின் ஆரோக்கியம் சுற்றுச்சூழல் சுகாதாரம் ஆகிய அனைத்தும் அமைவதற்கு நாம் ஆக்க பூர்வமாக ஈடுபடுதல் அவசியம். அதாவது தாய்சேய் நல விழிப்புணர்வு பிரசாரங்கள் மற்றும் பிரசுரங்கள், பிரசவத்திற்கான கூட்டமைப்பு வசதிகள், அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கொண்டு சேர்க்க போக்குவரத்து வசதிகள், பிரசவத்திற்குப்பின் தாய்சேய் நலம் பேணுவதற்கான வசதிகள், சிசுவின் பராமரிப்பு, பாலகர்களின் பள்ளிப்படிப்பு, அவர்களுக்கான ஊட்டச்சத்து ஆகிய அனைத்தையும் ரோட்டரி மாவட்டத்திலே நிறைவேற்ற வேண்டும்.

நமது தாய்நாட்டிலே நமது ரோட்டரி தாய்நல ஆரோக்கியத்திற்காக சேவைகள் பலவகை சேவைகள் புரிகிறது. குழந்தைகளுக்கான கல்வி, தாய் சேய்க்கான தடுப்பு ஊசிகள் மறறும் நடமாடும் சுகாதார மையங்கள் மேலும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் ஊட்டுதல் மற்றும் தம்மையும் தம் வாரிசுகளையும் நோய் நொடியில் இருந்து பாதுகாத்து கொள்ளும விழிப்புணர்வுகளையும் ரோட்டரி தொடர்ந்து சமூக சேவையாக ஆற்றி வருகிறது. இதற்கு உங்கள் அனைவரது ஆதரவோடு ஆக்கபூர்வமான பங்களிப்பும் வேண்டும்.

**Rtn. Dr. ஷகிலா ஜமீர்**
(மகப்பேறு மருத்துவர், ஷானவாஸ் மருத்துவமனை)

---

## NONAGENARIAN RTN. M.S. RAMAMOORTHY'S 60 YEARS OF ROTARY EXPERIENCE



ரோட்டரி மாவட்டம் 3000-த்தில் இரண்டாவது பழமை வாய்ந்த சங்கமாகத் திகழும் திருச்சிராப்பள்ளி ரோட்டரி சங்கம் 75-ஆவது ஆண்டு சேவையை நிறைவு செய்தது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

டாக்டர் காளமேகம், டாக்டர் ஈனாக், டாக்டர் சுந்தரம், டாக்டர் டிவி. ரெங்கநாதன் (கண் சிகிச்சை), டாக்டர் ஜோசப் (விழி இழந்தோர்க்கு மறுவாழ்வு தந்த மேதை), ஆச்சார்யா, சீனிவாசன், என்.கே. ராமசாமி, டி.எம்.பசுபதி, டி.என். மூக்கபிள்ளை, ராஜாமணி நாடார், பி.ரவீந்திரன் போன்ற ஜாம்பவான்கள் அங்கத்தினர்களாக இருந்த இச்சங்கத்தில் நானும் ஒரு உறுப்பினராக இருப்பதில் பெருமை அடைகிறேன்.

60ஆண்டு கால எனது ரோட்டரி வாழ்க்கை மறக்க முடியாத ஒன்றாகும். 1968ல் நான் தலைவராக இருந்தபோது, Rtn.ஞானதுரை மைக்கேல் ஆலோசனையோடு விழி இழந்தோருக்கான சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டில்தான் கோட்டை ரோட்டரி சங்கம் நம்மால் துவங்கப்பட்டது.

ரோட்டரி மாவட்டம் 321 இலங்கை, கேரளா, தமிழ்நாடு நமது பகுதி ஆகியவற்றைக் கொண்டிருந்தபொழுது அவற்றின் நிர்வாக குழுக்களில் முக்கிய அங்கம் வகித்துள்ளேன். பிறகு 322 (இலங்கை), 3000 மாவட்டங்கள் உருவானபோது 3000 மாவட்ட நிகழ்வுகளில் முக்கியப் பதவிகள் வகித்து பல மாவட்ட கான்பெரன்ஸ், அசெம்பிளி, இன்ஸ்டிடியூட்களில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது சங்க உறுப்பினர்களாகிய Rtn.S. ரவீந்திரன், Rtn.L. ராகவன், Rtn.R. தங்கராஜ் போஸ், Rtn.M. இளங்கோவன், Rtn.ராஜதுரை மைக்கேல் ஆகியோர் ஆளுநர்களாக இருந்து நமது சங்கத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். அவர்களோடு சேவை புரிந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். நமது சங்கத்தில் ப்ரோக்ராம் கமிட்டி சேர்மனாக 30 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்துள்ளேன். 2004ஆம் ஆண்டு எனது 40 ஆண்டு சேவையைப் பாராட்டி நமது சங்கம் என்னை கௌரவித்தது. நான் கௌரவ ரொட்டேரியனாக நியமிக்கப்பட்டேன். இன்றும் தொடர்ந்து ரோட்டரியில் இருந்து வருகிறேன். மேலும் எனது மகன் இதே சங்கத்தில் உறுப்பினராகப் பணியாற்றி வருவது மிக்க மகிழ்ச்சி.

வாழ்க ரோட்டரி !

**Rtn. PP. M. S. இராமமூர்த்தி**
Rotary Club of Tiruchirapalli

# RID 3000 - District Events 2024-2025

| S. NO | EVENTS | DATE | VENUE | CHAIRMAN | CLUB |
|---|---|---|---|---|---|
| 1 | Core Team Introduction | 01.10.2023 | Akash Club Madurai | Rtn.Dr.R. Gurusundar R | Madurai Meenakshi |
| 2 | Pre AGTS | 28.10.2023 & 29.10.2023 | Kodaikanal | Rtn. Shanmugavel G | Theni Central Gems |
| 3 | Pre PETS - SETS | 02.12.2023 | Tiruchirapalli | Rtn. Muruganandam B | Trichy Gems Innovators |
| 4 | AGTS | 23.02.2024 to 24.02.2024 | Ooty | Rtn. Suresh Kumar K | Aranthangi |
| 5 | PETS / SETS | 23.02.2024 to 25.02.2024 | Ooty | Rtn. Leo Felix Louis A & Secretary- Berlin Thomas | Pudukottai Crown City & Pudukkottai Central |
| 6 | District Team Training Seminar | 07.04.2024 | Perambalur | Rtn. Ramesh V | Karur Texcity |
| 7 | District Training Assembly | 12.05.2024 | Dindigul | Rtn. Ramesh S | Dindigul West |
| 8 | Grants Seminar | 28.04.2024 | Madurai | Rtn. Srirenganathan N S | Madurai Downtown |
| 9 | Workshop for Presidents & Secretaries 24-'25 | 07.06.2024 | Karur | Rtn. Meena Subbiah | Karur Angels |
| 11 | Leadership Seminar | 14.07.2024 | Madurai | Rtn. Kumarappan P | Madurai Innovators |
| 12 | Membership Seminar | 11.08.2024 | Perambalur | Rtn. Aravindan J | Perambalur Kings |
| 13 | District Rotary Women's Meet | 17.09.2024 to 19.09.2024 | Kodaikanal | Rtn. Kripa Vijayan Soans | Kodaikanal |
| 14 | Youth Service Seminar | 22.09.2024 | Tiruchirapalli | Rtn. Kirbakaran D | Tiruchirapalli |
| 15 | District RYLA | 27.09.2024 to 29.09.2024 | Kodaikanal | Rtn. Gokul G | Trichy Midtown |
| 16 | Interact RYLA | 04.10.2024 to 05.10.2024 | Tiruchirapalli | Rtn. Manavai Y Pangiraj | Manavai Kings/Vaiyampatti |
| 17 | Public Image Seminar | 13.10.2024 | Madurai | Rtn. Chithra Ramesh M | Dindigul Queen City |
| 18 | District Interact Conference in association with Rotary Kalai Mandram | 03.11.2024 | Madurai | Rtn. Aruna Visveswar | Madurai West |
| 19 | Foundation Seminar | 10.11.2024 | Madurai | Rtn. Vinodhan C | Madurai Metropolis |
| 20 | Rotaract RYLA | 18.12.2024 to 20.12.2024 | Bengaluru | Rtn. Ramamoorthy V R | Madurai North |
| 21 | District Conference | 08.02.2025 & 09.02.2025 | Ida Scudder Auditorium, Madurai | Rtn. Ramanathan L | All Rotary Clubs of Madurai Revenue District |
| 22 | District Rotaract Conference | 22.02.2025 & 23.02.2025 | Madurai | Rtr. Muthukumar | Rotaract Club of Madurai North |
| 23 | Rotary International Convention, Calgary,Canada | 21.06.2025 to 25 .06.2025 | Calgar, Canada | Rtn. J.Karthik, DGE | Perambalur |
| 24 | Awards Ceremony & Thanks Giving | 29.06.2025 | Tiruchirapalli | Rtn. Premanathan K | Trichy Rock City |

# VAAGAI ACTIVITIES

## CORE TEAM INTRODUCTION 01-10-2023

*Madurai*






## PRE AGTS 28-10-2023 & 29-10-2023

*Kodaikanal*





## PRE PETS & SETS 02-12-2023

*Tiruchy*





## AGTS 23-02-2024 & 24-02-2024

*Ooty*





# VAAGAI ACTIVITIES

## PETS / SETS 23-02-2024 & 24-02-2024

*Ooty*






## DISTRICT TEAM TRAINING SEMINAR 07-04-2024

*Perambalur*







## DISTRICT TRAINING ASSEMBLY 12-05-2024

*Dindigul*





## GRANTS SEMINAR 28-04-2024

*Madurai*





# VAAGAI ACTIVITIES

## WORKSHOP FOR PRESIDENT & SECRETARIES 07-06-2024





## SINGAPORE MALAYSIA CONVENTION & TOUR

2024 ம் ஆண்டு மே மாதம் 25 - 29 நாட்களில் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டையொட்டி ரோட்டரி மாவட்டம் 3000 சார்பாக Rtn. ராஜா கோவிந்தசாமி தலைமையில் சுமார் 70-க்கும் மேற்பட்ட ரோட்டரி உறுப்பினர்கள் சுற்றுலா பயணமாக கிளம்பி நான்கு நாட்கள் சிங்கப்பூர் மற்றும் மூன்று நாட்கள் மலேசியா மொத்தம் ஏழு நாட்கள் பயணம் சென்றோம். சிங்கப்பூரில் Night Safari, Sentosa, Universal Studios, Gardens by the Bay போன்ற இடங்களை சுற்றிப் பார்த்ததோடு ரோட்டரி சர்வதேச மாநாட்டு நிகழ்வில் ஒரு நாள் House of Friendship சென்று பல்வேறு நாடுகளில் இருந்து வந்த ரொட்டேரியன்களைச் சந்திக்க ஏற்பாடுகளையும், மேலும் Stall களை பார்வையிட ஏற்பாடு செய்திருந்தது சுற்றுலாவின் முக்கிய அம்சமாகும். பல்வேறு நாடுகளின் கலாச்சாரம், Rotary செயல்பாடுகள், Rotary திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

மேலும் கடைசி மூன்று நாட்கள் மலேசியா சென்று மலேசியாவில் உள்ள Batu Caves, Genting Highland, Kuala Lumpur மேலும் பல இடங்களை பார்வையிட்டு வெற்றிகரமாக அவரவர் இருப்பிடங்களுக்குத் திரும்பினோம். இச்சுற்றுலா மூலம் திருச்சி, மதுரை, கரூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, மணப்பாறை என பல ஊர்களில் இருந்து வந்திருந்த ரோட்டரி நண்பர்களுடன் பழகுவதற்கு உறுதுணையாக இருந்தது. உணவு, தங்குமிடம், சுற்றுலா என அனைத்தையும் Rotary International Convention 2024 சுற்றுலா அமைப்பாளர் Rtn. நடராஜசுந்தரம் (Tiruchirapalli Pheonix) மிகச்சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்து இந்த ரோட்டரி பன்னாட்டு கருத்தரங்கம் மற்றும் சுற்றுலாவை வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வாக மாற்றிவிட்டார்.





## GML COMMITTEE 2024 - 2025

Chairman

**Rtn. SL. Setumadava + 91 94424 71867**

Co Chairman

**Rtn. Vijayashree Vinodhan**

Co-ordinators

**Rtn. R. S. Nantha Kumar**

**Rtn. Aarthi Suresh**

**Rtn. K. Kanniappan**

**Rtn. S. Balakrishnan**

**VIP Project**

**(Value Impact Public Image)**
**Waterbodies Rejuvenation**

Rotary International Recommended,
United Nations Environment Programme
Endorsed Project
to be carried out throughout the year

**(2024-'25)**

Feedbacks of this Issue and Presentation of Significant Projects of your Club with Photos may be sent to **gml.ridistrict3000@gmail.com** (Let your photos be in **HD Version & in Document** format to suit in GML)

JULY IS




Rotary

TAKE ACTION : Join Rotary, Get Involved



*With Best Compliments from*

Rtn. Major Donor (L3)

**Dr. K. Srinivasan,**

Media Publicity Officer (2024 - 25)
RID 3000.


Edited by Rtn. **SL. Setumadava** and published by **District Secretary Administration Rtn. K. Ramesh Babu** (9994102580), for private circulation among members only. Printed by **Sree Vinayaga Screens**, Madurai.